சுமார் 30 கி.மீ. சுற்றளவிற்குக் கிராமங்களாக இருப்பதாலும், பேரையூரிலே குறைந்த அளவு எண்ணிக்கையிலேயாவது வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மற்றும் கோட்டத் தலைமையிடங்களில் மட்டும்தான் வாடகை வீடுகள் கட்டப்படும் என்பது கொள்கை. அதுவும் அரசு நிலங்கள் கிடைக்கப்பெற்றால்தான், அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 156, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

156—

சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***21259—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம தொகுதி, செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை தெற்கு பதிவு மாவட்டம், செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தற்போது அரசுக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதுமில்லை.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சார்பதிவாளர் அலுவலகம் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. இதற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் வேண்டுமென்றபோதுகூட, 5 Cent இடத்தை இதற்காக ஒதுக்கி நீண்ட நாட்களாகியும்கூட, இன்னும் சொந்தக் கட்டடம் கட்டப்படாமல் இருந்து வருகிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மிக விரைவில் அந்த அலுவலகத்திற்கு

1999 மார்ச் 23]

சொந்தக் கட்டடம் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தெற்கு பதிவு மாவட்டத்திலே கடந்த ஆண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ. 13.60 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகையால் ஒரே பதிவு மாவட்டத்திலே தொடர்ந்து கட்ட இயலாத நிலை இருக்கிற காரணத்தினாலே வருகின்ற ஆண்டிலே அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 157, திரு. பி.என். வல்லரசு மற்றும் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

157—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு நினைவிடம்

***15909—திரு. பி.என். வல்லரசு:**
திரு. ம. முத்துராமலிங்கம்:

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த வீட்டை, அரசு நினைவிடமாக ஆக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த வீட்டை அரசு நினைவிடமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.